# 4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.

நாள்.23.09.2025
எம்.சி.ஓ.பி எண்.6790/2017
ம.சா. 1
பெயர். ஷிவானி
த/பெ.திரு. கிருஷ்ணகுமார்
வயது. 24

**4வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் B.Sc Catering Science and Hotel Management படித்துள்ளேன். திருமணமாகவில்லை. நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. என் தகப்பனாருடைய விபத்து இழப்பீடுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரூ50 கோடி கேட்டு இந்த மனு தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சட்டப்படி விவகாரத்தாகவில்லை. நானும் என் அம்மாவும் திருச்சியில் என் அம்மாவுடைய தந்தையார் வீட்டிலிருந்தேன். என் தந்தையாருடைய வருமானத்தை நான் சார்ந்தில்லை. ஆனால் என் தந்தையார் தந்தை என்ற முறையில் அனைத்து எனக்கு செய்து வந்தார். 2001லிருந்து அப்பாவும் அம்மாவும் பிரிந்து வாழ்ந்துவந்தார்கள் ஆனால் அப்பா என்னுடன் தொடர்ப்பிலிருந்தார். தந்தையாருடைய வருமான ரசீதை தாக்கல் செய்துள்ளேன் அசலை தாக்கல் செய்யவில்லை. இந்த மனு தாக்கல் செய்யும் போது நான் இளவராக இருந்தேன். என் சார்பாக என் அம்மா தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள். தற்போது அசல் வருமான ரசீதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. தந்தை பற்றிய எந்த விவரமும் தெரியமல் இழப்பீடு பெற வேண்டி பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. TN 01 AY 1974 என் தந்தையாருடைய இருசக்கர வாகனமாகும். விபத்தை குறித்து முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டி மீது தான் போடபப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் தந்தையின் இருசக்கர வாகனத்தினுடைய காப்பீடு நிறுவனம் என்றும் அவர் 3ம் தரப்பினராக கருத முடியாது என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தினுடைய உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் என்பதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்றும்1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தர கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH
Digitally signed by ARUNDHADHI MAGESH